# காகமும் தம்பியும்

## சிறுவர் பாடல்கள்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பாடல்கள்

# காகமும் தம்பியும்

## சிறுவர் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் தம்பியும்

## சிறுவர் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | காகமும் தம்பியும் |
| விடயம் | : | சிறுவர் இலக்கியம் |
| ஆசிரியர் | : | திரு ச. அருளானந்தம் |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்க்கு |
| ஓவியங்கள் | : | திரு ச.அ. அருள்பாஸ்கரன் |
| முதற்பதிப்பு | : | 6 . 10 . 1996 |
| வெளியீடு | : | அருள் வெளியீடு |
| பதிப்பகம் | : | குயிக் கிராபிக் பிறின்ற்<br>5 - 1/20, சுப்பர் மார்க்கட்,<br>கொட்டாஞ்சேனை,<br>கொழும்பு - 13 .<br>☎ 432627. |
| விலை | : | ரூ 30. 00 |


**படையல்**

தம்மை உருக்கி
சமுதாயச்செல்வங்களை
நம்
நிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிறுவர்களுக்கான கலை இலக்கியம் படைத்தல் என்பது மிகக்கடினமான பணி. அது ஒரு இலகுவானபணி என்னும் பிழையான அபிப்பிராயத்தின் காரணமாகவே சிறுவர்கலை இலக்கியம் என்பது நம்மத்தியில் தன்நோக்கத்தை நிறைவு செய்வதில் சற்று இடறியிருக்கிறது. ஆயினும் ஆங்காங்கே சில நல்ல முயற்சிகளும் இடம்பெறத்தான் செய்கின்றன. அந்த வகையில் ச. அருளானந்தம் அவர்களின் 'காகமும் தம்பியும்' சிறுவர் பாடல்களின் தொகுப்பு வெளிவந்திருக்கின்றது. மொத்தம் பதினெட்டுப் பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. அனைத்தும் காகத்தின் செயல்களை உள்வாங்கி காட்சிப்பாங்கினூடு படிப்பினையூட்டுபவையாய் உள்ளன.

சிறுவர்களின் பருவம் மிகுந்த கவனத்திற்குரியது. கேள்வி கேட்டல், கூர்ந்து கிரகித்தல், கற்பனை செய்தல், மிதமிஞ்சிய ஈடுபாடு என்பன இப்பருவத்திலேயே காணப்படும். இவ்வியல்பூக்கங்கள் சரியாகப் பயன்படுத்தபட வழி அமைக்கப்படுமாயின் சிறுவர்களின் அறிவார்ந்த உளவியல் அடித்தளம் பலம் வாய்ந்ததாக அமைந்துவிடும். இதற்கு சிறுவர் இலக்கியங்களும் கூடுதல் பங்களிப்பைச் செய்ய வல்லவை.

இப்பின்னணியூடு ச. அருளானந்தம். அவர்களின் முயற்சி தொடரவேண்டுமென வாழ்த்துவதோடு அவரின் அடுத்தடுத்த முயற்சிகள் காட்சிப்பாங்கினூடான படிப்பினையாக மட்டுமல்லாது அறிவூட்டுவதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும். மிகக்குறிப்பாக வாழ்வையும் உலகையும் இலகுவாய் விளக்குவதாகவும், அமையும் என்று எதிர்பாக்கிறேன்

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

தனித்தன்மை வாய்ந்த புதியதொரு உலகம் சிறுவர்களது உலகம். அன்றலர்ந்த புத்தம் புது மலர்களாக விளங்கும் சிறுவர்களது உலகம் குதூகலமுடையது. ஆடுவதும, பாடுவதும், கற்பனாசக்தி மூலம் பாவனை செய்து பேசுவதும், சிறுவர்களது செயலாகும்.

சிறுவர்களது உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் பாடல்கள் தொகையிலும், தரத்திலும், போதியளவு இல்லை என்றே சொல்லலாம். நல்ல நல்ல பாடல்களை நம் சிறார்களுக்கு வழங்க வேண்டும். சிறுவர் இலக்கியம் பல்கிப் பெருக வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு ச. அருளானந்தம் அவர்கள் ஆரம்பக்கல்வியில் நாட்டம் கொண்டு உழைப்பவர்.

நாம் நாளாந்தம் நம்சூழலில் காணும் பறவையை மையமாக வைத்து பதினெட்டுப் பாடல்களை அமைத்து அதன் மூலம் சிறார்களைச் சிந்திக்க வைக்கின்றார்.

சிறார்கள் நல்ல பழக்கவழக்கம் உடையவர்களாகவும், இயற்கையை உணர்ந்தவர்களாகவும், இறைசிந்தனை உடையவர்களாகவும் விளங்கு வதற்கு வழிவகுத்துப் பாடல்களை யாத்துள்ளார். இனிய எளியதமிழில் சிறார்களுக்கு ஏற்றவாறு பாடல்னை ஆக்கியுள்ளார்.

புத்தியுடன் கூடிய முயற்சி, மற்றவர்களுடன் தம்மிடமுள்ளவற்றைப் பகிர்ந்துகொள்ளல், மற்றவர் துன்பத்தில் பங்கு கொள்ளல், பிறர் மகிழ்வதைப் பார்த்துத் தான் மகிழ்ச்சியடைதல், எளியவரை வலியாரிடமிருந்து காத்தல், சூழற் சுத்தம், உண்ணும் போது கூடிவிருந்துண்ணல் , அதிகாலையில் துயில் எழுதல், போன்ற நல்ல பண்புகளைச் சிறுவர்களிடம் விருத்தி செய்யக்கூடிய வகையில இப்பாடல்கள் அமைந்துள்ளமை பாராட்டற்குரியதாகும். இப்பாடல்கள் அனைத்தும் என் உள்ளத்தைத் தொட்டன.

ஆரம்பக்கல்விப் பாடத்திட்டத்திற்கமைய அமைந்திருக்கும் இப்பாடல்களைக் கொண்ட 'காகமும் தம்பியும்' என்னும் நூல் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் கற்பித்தற் செயற்பாடுகளுக்கு பெருந்துணையாக அமையும் என்பதில் ஐயமில்லை

'இன்பக்கனிகள்' 'பாட்டுப்பாடுவோம்' என்னும் சிறுவர் பாடல்கள் வரிசையில் ஆசிரியரின் மூன்றாவது தொகுப்பாக 'காகமும் தம்பியும்' எனும் சிறுவர் பாடல்கள் வெளிவருகிறது. சிறுவர்களுக்கான மேலும் பல ஆக்கங்களை ஆசிரியர் ஆக்க வேண்டும் அதற்கு கல்வி உலகம் ஊக்குவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

செல்வி தி. பெரியதம்பி
மாகாண கல்விப் பணிப்பாளர்

மாகாண கல்வித் திணைக்களம்
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

இருகை நீட்டி புதுமலராக குறுகுறு நடந்து, புதுஉலகமாம் பள்ளிக்கு வரும் சிறார்கள் ஒப்பற்ற செல்வங்கள் . புது உலகம் படைக்க புறப்பட்ட சிற்பிகள். அவர்களது உலகம் புதுமையானது . துள்ளி ஓட , துவண்டு விழ, ஆடி மகிழ, பாடி ஆட, கூடி குலவ, பேரார்வம் கொண்டவர்கள் .

ஆரம்பக் கல்வி மிக முக்கியமானது . அடித்தளமானது வேலைப் பளுவாக ஆக்காது, விளையாட்டாக மாற்றி இலகுவாக்கி, கற்கச் செய்ய வேண்டும் . கற்றல் அநுபவங்களை இச்சிறார்கள் பெற வேண்டும் .

ஆடல், பாடல், அபிநயத்தல், கதை கேட்டல் . சிறார்களுக்கு பேரின்பம் ஊட்டும். ஆரம்பக்கல்விப் பாடத்திட்டத்திற் கேற்ப தினமும் நமது சுற்றாடலில் காணும் காகத்தை வைத்து பதினெட்டுப் பாடல்களை மிக எளிய முறையில் உங்கள் முன் வைத்துள்ளேன். இவை யாவும் பாலர்களைக் கொண்டு பரீட்சித்த பின்னரே நூலுருவாக்கியுள்ளேன் .

இப்பாடல்களை அபிநயம் மூலம் கற்பித்தால், மாணவர்களைக் கற்றல் செயற் பாட்டில் ஈடுபடுத்தும் போது முழு வெற்றிகிட்டும் என்பது உறுதி . அத்துடன் பாடல் களுக்கு கீழே உள்ள படங்களுக்கு நிறந் தீட்டும் படி மாணவர்களை ஊக்கமூட்டும் படியும் கேட்டுக் கொள்ளுகிறேன் .

இப்பாடல்களை கணனியில் வடிவமைத்துத் தந்த செல்வி சித்திரா ஜெகதீசன் நன்றிக்குரியவர். பாடல்களைப் படித்து சுவைத்துப் பாராட்டி மதிப்புரையளிதத்துள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி அவர்களுக்கும் ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கு இவ்வகை நூல்களைத் தொடராக வெளிவிட வேண்டும் . சிறுவர் இலக்கியம் பல்கிப் பெருக வேண்டும் . என்ற ஆதங் கத்தோடு அணிந்துரை தந்து பேரூக்கமூட்டும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, அமைச்சின் செயலாளர் திரு சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கும் , படங்களை வரைந்த திரு ச. அ . அருள்பாஸ்கரன் அவர்களுக்கும், இந்நூலுக்கு ஒத்தாசை வழங்கவிருக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், அனைவருக்கும் அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் உளங்கனிந்த நன்றியை நவில்கின்றேன் .

நன்றி

ஆலங்கேணி
கிண்ணியா .

ச. அருளானந்தம்
மாகாண கல்வித் திணைக்களம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே......


1. காகமும் செயலும்
2. காகமும் நரியும்
3. காகமும் பருந்தும்
4. காகமும் நாயும்
5. காகமும் சூழலும்
6. காகமும் விருந்தும்
7. காகமும் கடமையும்
8. காகமும் சோகமும்
9. காகமும் தம்பியும்
10. காகமும் குயிலும்
11. காகமும் விரதமும்
12. காகமும் பசுவும்
13. காகமும் உடலும்
14. காகமும் பார்வையும்
15. காகமும் பாம்பும்
16. காகமும் தலைமையும்
17. காகமும் காவிரியும்
18. காகமும் அறிவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் செயலும்

1. காகம் ஒன்று வந்தது
தாகம் என்று திரிந்தது
சோகம் கொண்டு அலைந்தது
சுற்றிச் சுற்றிப் பறந்தது.

வீட்டுத் தோட்ட முற்றத்தில்
குடம் இருக்கக் கண்டது
நாட்டம் கொண்டு வந்தது
நாடிக் குடத்தில் இருந்தது.

குடத்துள் நீரைக் கண்டது
குடிக்க முடியாதிருந்தது
திடமாய் விரைந்து எழுந்தது
குடமும் விசையில் சரிந்தது.

தாகம் தீரக் குடித்தது
இராகம் பாடிப் பறந்தது
காகம் செய்த செயலினை
தம்பி நீயும் உணர்ந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## காகமும் நரியும்

2. ஆச்சி இறைச்சி வாங்கினள்
அரிந்து துண்டாய் வைத்தனள்
வீச்சாய் காகம் வந்தது
விரைந்து இரண்டை எடுத்தது.

பறந்து கொண்டு சென்றது
பெரிய மரத்தைச் சேர்ந்தது
செறிந்த கிளையில் வைத்துமே
கொத்திக் கொத்தித் தின்றது.

கொத்தித் தின்னும் போதிலே
கீழே நரியைக் கண்டது
மெத்தப் பசியில் வாடியே
மெலிந்து நரியும் பார்த்தது.

இந்தா என்று சொல்லியே
இறைச்சித் துண்டைப் போட்டது
நொந்த நரியும் உண்பதை
காகம் பார்த்து மகிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் பருந்தும்

3. பருந்து உயரப் பறந்தது
பார்வை நிலத்தில் பதிந்தது
இருந்து எதையோ கண்டது
இடுக்கிக் கொண்டு விரைந்தது.

கோழி பதறித் தவித்தது
குஞ்சு அலறித் துடித்தது
கீழே இருந்த சேவலும்
சீறிப் பாய்ந்து சோர்ந்தது.

சோகம் கொண்ட தாயையும்
தவிக்கும் கோழிக் குஞ்சையும்
காகம் பார்த்துப் பறந்தது
பருந்தைச் சாடி வென்றது.

பொறுக்க முடியாப் பருந்துமே
போட்டுக் குஞ்சைப் போனது
சிறகால் குஞ்சைக் கோழியும்
சேர்க்கக் காகம் மகிழ்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் நாயும்

4\. கட்டுச் சோற்றுப் பெட்டியை
கடியன் நாயும் கண்டது
கிட்ட வந்த நாய்களை
கடித்து விரட்டி நின்றது.

பசியில் துடித்த நாய்களும்
பதுங்கி நின்ற பூனையும்
ருசித்துத் தின்னும் கடியனை
திட்டி மனதுள் வைதன.

காகக் கூட்டம் வந்தது
காட்சி இதனைக் கண்டது
வேகம் கொண்டு பாய்ந்தது
விரட்டி நாயும் நின்றது.

தருணம் பார்த்துக் காகமும்
தட்டிப் பொதியைச் சிதைத்தது
திரண்டு நின்ற பிராணிகள்
தின்று மகிழ்ந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் சூழலும்

5. விரைவாய் போன லொறியது
முட்டி எலியை அடித்தது
அரைந்து தேய்ந்த உடலது
அந்தத் தெருவில் கிடந்தது.

பாவம் பார்க்க ஆளில்லை
பக்கம் போட தோதில்லை
போவோர் வருவோர் பார்த்தனர்
பார்த்துப் பார்த்துப் போயினர்.

காகம் ஒன்று வந்தது
கண்ணால் எலியைக் கண்டது
காகா என்று சொன்னது
காகக் கூட்டம் சேர்ந்தது.

சத்தம் போட்டு நின்றது
தசையை எலும்பைத் தின்றது
சுத்தம் செய்து போனது
சூழல் தப்பிப் பிழைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் விருந்தும்

வீட்டு வேப்பை மரத்திலே
விடிய காகம் கரைந்தது
கூட்டும் அக்கா கூறினாள்
கூடி விருந்து வருகுதாம்.

அண்ணா கடிதம் வருகுதா
அப்பா செய்தி வருகுதா
கண்ணா காக்கை அண்ணாவே
கரைந்து காட்டு என்றனள்.

கரிய சிறகை விரித்துமே
காகம் கரைந்து நின்றது
புரிய வில்லை எனக்குமே
புதிராய் எல்லாம் இருந்தது.

மாலை நேரம் வந்தது
வண்டி வந்து நின்றது
காலை காகம் கரைந்தது
கண்டேன் அப்பா வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் கடமையும்

நல்ல பனி பெய்தது
நாலு மணி அடித்தது
மெல்லக் காகம் கரைந்தது
விடிந்து கொண்டு வந்தது.

சேவல் கூவிக் காட்டின்
சேர்ந்து பறவை பாடின
கூவிக் குயிலும் பறந்தன
காகம் பிரிந்து சென்றன.

அலைந்து காகம் திரிந்தது
அங்கோர் உணவைக் கண்டது
குலைந்து பிரிந்த கூட்டத்தை
கூடி அழைத்துக் கொண்டது.

வந்த காகக் கூட்டமும்
வடிவாய் உணவை உண்டன
குந்தி இருந்த தந்தையும்
கூட்டு உறவை காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் சோகமும்

8 அந்தி நேரம் ஆனது
அலைந்து காகம் பறந்தது
பந்தி உணவை முடித்தது
பாடிக் காகம் திரிந்தது .

கூட்டம் சேர்ந்து பறப்பதும்
கூடி இருந்து கதைப்பதும்
ஆட்டம் ஆடி நடப்பதும்
அழகுக் காகம் செய்தது .

மின்னைக் கடத்தும் கம்பியில்
மறந்து காகம் பட்டது
கண் இமைக்கும் பொழுதிலே
காகம் துடித்து வீழ்ந்தது .

கண்ட காகம் கூட்டமாய்
கதறிக் கரைந்து திரிந்தன
கொண்ட சோகத் துயரிலே
கூடி ஒன்றாய் அழுதன .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் தம்பியும்

9. அடம் பிடித்துத் தம்பியும்
அழுத வண்ணம் இருந்தனன்
உடன் உணவை ஊட்டவே
உபாயம் அம்மா தேடினள்.

காகம் தன்னை நினைத்துமே
காகா என்று கூவினள்
காகம் பறந்து வந்தது
கண்ட தம்பி துள்ளினான்.

சோற்றை அம்மா போட்டனள்
தத்திக் காகம் எடுத்தது
சோற்றை வாயில் ஊட்டினள்
தம்பி மகிழ்ந்து உண்டனன்.

தம்பி பிடிக்கப் போவதும்
தள்ளிக் காகம் இருப்பதும்
அம்மா உணவைக் கொடுப்பதும்
அழகுக் காட்சி தானடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## காகமும் குயிலும்

10. எங்கள் நாவல் மரத்திலே
இரண்டு காகம் வந்தன
தங்கக் கூடு கட்டின
தங்கி இரண்டும் வாழ்ந்தன .

காகம் இல்லா நேரத்தில்
குயிலும் முட்டை இட்டது
காக முட்டை இரண்டுடன்
கணக்கு நான்காய் ஆனது .

அடையும் காகம் காத்தது
அழகுக் குஞ்சும் பொரித்தது
சடையும் வளர்ந்து கொண்டது
சத்தம் கூடப் போட்டது.

குஞ்சு பெரிதாய் ஆனது
கூவி இரண்டு போனது
மிஞ்சி இருந்த இரண்டையும்
பார்த்து காகம் மகிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் விரதமும்

11. சனிக்கிழமை வந்தது
சமையல் அம்மா முடித்தனள்
இனிய விரதம் இன்றதாம்
இலையில் உணவு படைத்தனள் .

வெளியில் அம்மா வந்தனள்
வெறிக்க வெறிக்க பார்த்தனள்
சுழித்து முகத்தைத் தேய்த்தனள்
சுற்றி அயலில் வேர்த்தனள் .

உணவைக் கையில் எடுத்தனள்
உயரத் தள்ளி வைத்தனள்
கணத்தில் காகா என்றனள்
காகம் பறந்து வந்தன .

கொத்தி உணவை உண்டன
கொள்ளை இன்பம் கொண்டன
மெத்த மகிழ்ந்து அம்மாவும்
விரதம் நன்றே என்றனள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## காகமும் பசுவும்

12. பனை மரத்தின் நிழலிலே
படுத்துப் பசுவும் கிடந்தது
அணுகிக் காகம் வந்துமே
அமர்ந்து பசுவில் இருந்தது.

பசுவின் காதில் காகமும்
பதமாய் ஏதோ சொன்னது
பசுவும் சுகமாய் அசைந்துமே
புரண்டு புரண்டு கிடந்தது.

வாலில் முதுகில் செவியுள்ளும்
வயிறு கழுத்து இமையிலும்
காலில் தொடையில் உடலிலும்
கண்டு உண்ணி எடுத்தது .

வயிறு நிரம்பிக் காகமும்
மரத்தில் ஏறிக் கரைந்தது
அயர்ந்து பசுவும் எழுந்துமே
ஆட்டி வாலைச் சென்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் உடலும்

13. குப்பை மேட்டில் காகங்கள்
குந்தி இருந்து இரைந்தன
தொப்பை வயிற்று மாமாவும்
தூக்கிக் குப்பை கொட்டினார்.

உயரப் பறந்து எழுந்தன
உடனே வந்து குந்தின
உயர்ந்த பசி போக்கலாம்
உள்ளம் களி கொள்ளலாம்.

இறைச்சி மீன் கழிவுகள்
எலும்பு குடல் மிகுதிகள்
நிறைய இருக்கும் என்றென
நினைத்துப் பிய்த்துக் கிளறின.

இறந்த காக உடல்களே
இருக்கக் கண்ட காகங்கள்
கரைந்து எழுந்து போயின
கண்ட நாயும் விலகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## காகமும் பார்வையும்

14. வீட்டுத் திண்ணை முற்றத்தில்
வந்து காகம் இருந்தது
தோட்ட மரஞ் செடிகளில்
தேடி எதையோ பார்த்தது .

காகம் உற்றுப் பார்ப்பதைக்
காட்டி அப்பா வினவினார்
காகம் பார்க்கும் பார்வையின்
கதை தன்னைக் கூறினார் .

சீதை குளிக்கும் போதிலே
சயந்தன் பார்க்க எண்ணினான்
பேதை காகம் போலவே
போய் இருந்து பார்த்தனன் .

அறுகம் புல்லால் இராமனும்
அம்பு செய்து விட்டனன்
ஒருகண் பார்வை மட்டுமே
உண்டு என்று விளக்கினார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் பாம்பும்

15. கொண்டைக் கிளார் கூட்டிலே
குஞ்சு இரண்டு இருந்தன
கண்ட புடையன் பாம்பது
கௌவிக் கொண்டு சுருண்டது.

சுருண்டு கொண்டு குஞ்சையும்
சுவைத்து விழுங்கிக் கொண்டது
அருண்டு பயந்த குருவிகள்
அலறித் துடித்து அழுதன.

பார்த்து இருந்த காகமும்
பதறித் துடித்து எழுந்தன
வேர்த்துப் பறந்து கரைந்தன
வெளியில் செய்தி பரப்பின.

கண்டு கொண்ட இளைஞர்கள்
காற்றாய் பறந்து வந்தனர்
கொண்டு வந்த தடிகளால்
தாக்கிப் பாம்பைக் கொன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் தலைமையும்

16. கூடு காகம் கட்டிடும்
கூடி முட்டை இட்டிடும்
தேடி உணவை உண்டிடும்
தோட்டி போன்று உழைத்திடும்.

ஒன்று கூடி வாழ்ந்திடும்
உறவு கொண்டு கரைந்திடும்
நின்று வரும் செய்தியை
நமக்கு மெல்லச் சொல்லிடும்.

மக்கள் வாழும் சூழலின்
மாசு தன்னைப் போக்கிடும்
பக்கம் சூழ்ந்து எம்முடன்
பழகி என்றும் வாழ்ந்திடும்.

சனி பகவான் வாகனம்
தனக்கு காகம் ஆக்கினார்
சனி விரத நாட்களில்
தலைமை அதிதி காகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகமும் காவிரியும்

17. வரட்சி கண்டு மரஞ்செடி
வாடி வதங்கிப் போயின
விரக்தி கொண்ட உழவர்கள்
பிள்ளையாரை வேண்டினர்.

பெரிய மரத்தின் நிழலிலே
பெருமை வாய்ந்த அகத்தியர்
அருந்தவத்தைச் செய்திட
அமர்ந்து நிமிர்ந்து இருந்தனர்.

நீரைக் கொண்டு கமண்டலம்
நிரம்பிப் பக்கம் இருந்தது
பாரைச் செழிக்கப் பிள்ளையார்
பார்த்த வண்ணம் இருந்தனர்.

தருணம் கண்ட பிள்ளையார்
காகம் போன்று பறந்தனர்
உருண்டு வீழ்ந்த கமண்டலம்
ஊற்றுக் காவிரி ஆனதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகமும் அறிவும்

18. காகக் கூட்டம் சேர்ந்தது
கரைந்து கூச்சல் இட்டது
வேகம் கொண்டு கூச்சலும்
விண்ணை முட்ட எழுந்தது.

தலைவர் யாராம் என்பதில்
தர்க்கம் மூண்டு வளர்ந்தது
குலைந்து போகும் கூட்டத்தை
காகம் ஒன்று தடுத்தது.

அறிவு படைத்த மனிதனே
அடித்து வெட்டி அழிகிறான்
வெறி பிடித்த மனிதர் போல்
வெந்து நாமும் அழிவதா.

ஐந்து அறிவு படைத்த நாம்
அவர்க்கு புத்தி புகட்டுவோம்
அந்தக் காகம் சொன்னதும்
அனைத்தும் ஏற்றுக் கலைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி மாணவர்களை நன்னெறிப் படுத்தும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் உன்னதப் பதவியை உயர்வாக மதிக்கும் திரு.அருளானந்தத்தின் உள்ளத்தில் உள்ளது உயர்ந்த கருத்துக்கள், நிறைந்த கவிதை, அருளின் பாடல்கள் பிள்ளைகளைக் களிப்பில் ஆழ்த்தி பாடவும், ஆடவும், வைக்கும். பாடும் போது இனிக்கும் பாடல்கள் நூலை மூடிய பின்னரும் செவிகளில் ஒலிக்கும்.

*தமிழ்மணி உடுவை தில்லைநடராஜா*

சிறுவர் உலகம் தனித்தன்மை வாய்ந்தது. சிறுவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதிலும் வயது வந்தவர்களுக்கு ஒரு தனிமகிழ்வு. வியப்புடன் கூடிய சிந்தனையைத் தூண்டி நற்பண்பைச் சிறாரிடை வளர்க்கும் நோக்குடன் சிறுவர் உலகில் புகுந்து கூடி மகிழ்வு அளிக்கக் காலடி எடுத்து வைத்த அருளானந்தத்தின் பணி தொடர நல்லாசிகள்.

*எஸ். நவரெத்தினராஜா*

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்

நூலாசியர் கவிதை, சிறுகதை, நாடகப் போட்டிகளில், பல பரிசில்கள் பெற்றவர். சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, கேணிச்சுடர், வெற்றிமணி, குமரன், ஈழமணி, பத்திரிகைகளில் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன

இவரது சிறுவர் பாடல்களில் நல்ல கருத்துகளும் படிப்பினைகளும் நிறைந்து காணப்படும் ஆரம்பக்கல்விப் பாடத்திட்டத்திற்கமைய அமைந்திருக்கும் 'காகமும் தம்பியும்' நூல் சிறந்ததுணை நூலாகும்.

*வெ.சபாநாயகம்*

முன்னாள் கல்விப் பணிப்பாளர் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org